# சோளகர் தொட்டி'யில் பெண்கள் குறித்த கருத்தாக்கம்

***வே. வைசிகா***
***தமிழ்த்துறை, அரசு மகளிர் கலைக்கல்லூரி***
***நிலக்கோட்டை***

தமிழில் கதை சொல்லும் முறை நெடுங்காலமாக இருந்து வருகின்றது. கதை சொல்லும் முறையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது நாவல். நாவல் பொழுதுபோக்கு இலக்கியம் அல்ல. ஆழ்ந்த உண்மைகளையும், கருத்துக்களையும் மனித குலத்துக்கு எடுத்தியம்பும் கருவூலங்களாகக் கருதப்படுகின்றது. ச.பாலமுருகனின் ''சோளகர் தொட்டி'' நாவல் தமிழகத்தின் கர்நாடக எல்லைப்புற மேற்குத்தொடர்ச்சி மலைக் கிராமத்தில் வாழும் சோளகர் பழங்குடி மக்கள் எதிர்கொண்ட வாழ்க்கைப்போராட்டத்தை மையப்படுத்தி அமைகிறது. இம்மக்களின் பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறை, பெண்களின் சுதந்திர உணர்வு போன்றவற்றை முதல் பாகமாகவும், அரசு இயந்திரத்தின் அசுரத்தனத்தின் முன்பாக அப்பாவிப் பழங்குடிப்பெண்கள் நசுங்கிப்போகிற அவலத்தை இரண்டாம் பாகமாகவும் பதிவு செய்கிறார் படைப்பாளி. இந்நாவலுக்குப் பதிப்புரை எழுதிய வி.பி. குணசேகரன் **''சந்தனக் கடத்தல் வீரப்பன் தேடுதல் வேட்டையில் அரசு இயந்திரங்களின் கொடூர அடக்குமுறையால் பழங்குடி மக்கள் எதிர்கொண்ட துயரங்களுக்கு இந்நாவல் மட்டுமே தமிழில் இலக்கிய சாட்சியாகும்''** என்று குறிப்பிட்டிருப்பது இக்கட்டுரை உருவாக்கத்திற்கு ஓர் அடிப்படை உந்துதல் எனலாம். பாலியல் கொடுமைக்கு உள்ளாகும் பெண்களின் உடல் கூறுகளில் ஏற்படும் அசௌகரியங்கள், அதனால் உருவாகும் உளவியல் தாக்கங்கள், அவர்களைச் சமூகம் பார்க்கும் கோணம் ஆகியவை இக்கட்டுரையில் சித்திரிக்கப்படுகின்றன.

பழங்குடியினரிடம் ஆண் - பெண் வேறுபாடின்றி இரவில் காவல் காத்தல், விவசாயத் தொழிலில் ஈடுபடல் எனப் பெண்கள் ஆணுக்கு இணையான உயிரியாக இருந்ததை நாவல் பதிவு செய்துள்ளது.

## காவல் காக்கும் பணி

ஆண்மக்களின் வீரவெளிப்பாடுகளில் ஒன்றாக, வேட்டையாடுதலைக் கருதலாம். மலைகளில் வாழும் சோளகர் தங்களைத் துன்புறுத்தும் விலங்குகளை வேட்டையாடுதல் மற்றும் தங்கள் குடில் இருக்கும் பகுதிக்கு வரவிடாமல் விரட்டியடித்தல் என விலங்குகளின் தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொள்கின்றனர். தங்கள் நிலத்தில் விளைந்த சாமை, ராகி, தினை, கம்பு, சோளம் போன்ற உணவு தானியங்களைக் குடிலுக்கு முன் உள்ள குத்தாரி என்று அழைக்கப்படும் தானியக்கிடங்கில் சேகரித்து வைக்கின்றனர். குத்தாரியை காட்டில் திரியும் கொம்பன் யானையிடம் இருந்து இரவில் பாதுகாக்கும் பணியில் தொட்டியில் உள்ள ஆண்கள் ஈடுபடுகின்றனர். அப்பொழுது அங்குள்ள சின்னத்தாயி, ரதி, ஜோக்கம்மாள், கெம்பம்மாள் போன்ற பெண்கள் தங்கள் வீட்டிலிருந்து தகரங்களை எடுத்து வந்து தட்டுகின்றனர். சில பட்டாசு வெடிகளை எடுத்து கொழுத்தி வீசுகின்றனர். இவ்வாறு காவல் தொழிலில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் ஈடுபடுகின்றனர் என்பதை

**''அவரவர் வீட்டிலிருந்த தகரங்களை எடுத்து வந்து தட்டத் துவங்கினர். சப்தம் அதிகரிக்கவே யானைகள் சற்று பின் வாங்கின''** என்ற வரிகளின் மூலம் நாவலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## விவசாயத் தொழில்

சமூகத்தில் மனிதனுக்கு மதிப்பையும் வருவாயையும் தேடித்தருவது தொழில். தொட்டியில் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட காட்டுநிலத்தில் சாமை, ராகி, தினை, கம்பு, சோளம் போன்ற சிறு தானியங்களைப் பயிரிடுகின்றனர். காடுகளில் (Reserved forests) சோளகர்க்குக் கொடுக்கப்பட்ட நிலத்தை ஆண்கள் செம்மைப்படுத்தி அதில் வேளாண்மை செய்கின்றனர். அப்பொழுது சோளகப்

பெண்களும் ஆண்களுக்குச் சமமாக நிலத்தைச் செம்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்பதை
**“ஜோகம்மாள் கணவன் பேதனுடன் அவர்களின் விதைக்கும் நிலங்களில் பூமியைக் கொத்தி கையாலேயே உழவு செய்தார்கள்”** என்ற வரி சுட்டிக்காட்டுகின்றது.

**மறுமணம் செய்யும் உரிமை**

ஆண்கள் மட்டும் மறுமணம் செய்து கொள்ளலாம் என்ற நிலையில்லாமல் பெண்ணும் மறுமணம் செய்து கொள்ளலாம் என்ற வழக்கம் சோளகரிடம் காணப்படுகின்றது. ஒரு சோளகப் பெண், கணவன் இறந்ததும் வேறு கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவதற்கான சுதந்தரத்தை அவர்களுடைய சமூகம் வழங்கியிருந்தது. **“நூயர் என்ற ஆப்பிரிக்கப் பழங்குடிகளில் ஒருவன் இறந்துவிட்டால் கைம்பெண்ணை அவன் ஆவியின் நினைவாக உயிரோடு இருக்கும் சகோதரன் மணந்து கொள்வான். இது ஆவித்திருமணம் (Ghost Marriage) எனப்படும். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தை இறந்த சகோதரனின் குழந்தை என்றே கருதப்படும்”** என **பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல்** நூலில் கூறியுள்ள கருத்திற்கேற்ப சோளக மக்களிடமும் பெண் ஒருத்தியின், கணவன் இறந்தவுடன் அவனது தம்பியைத் திருமணம் செய்யும் வழக்கம் இருக்கிறது. கெம்பம்மாள் கணவன் சிக்குமாதா இறந்தவுடன் அவனது தம்பி கரியனைத் திருமணம் செய்து கொள்கிறாள் என்பதை
**கோல்காரன் தனது மூதாதையரின் தடியை உயர்த்திப் பிடித்து மந்திரத்தை முணு முணுத்தபின் கரியனைத் தாலிகட்டக் கூறினான்.கரியன் கெம்பம்மாவின் கழுத்தில் தாலி கட்டினான்”** என்ற வரியின் மூலம் சோளகர் மக்களிடம் விதவை மறுமணம் செய்யும் வழக்கம் இருப்பதை அறிய முடிகிறது.

**ஆணும் - பெண்ணும் இணைந்து ஆடல்**

கோயல் எனும் குழல் இசைக்கருவி, உறும்புக்கட்டை எனும் உறுமி இசைக்கருவி, தம்பட்டம் எனும் தப்பு இசைக்கருவி, வாத்தியம் ஆகியவற்றைக் கொத்தல்லி மற்றும் சோளகர் ஆடவ்கள் இசைக்க வயதான பெண்ணான ஜோகம்மாள் மற்றும் இளம் பெண்களும் பிற ஆடவர்களும் வட்டமாக நின்றாடுகின்றனர் என்பதை
**பெண்கள் வட்டமாகக் கும்மியடிப்பது போல இடுப்பை வளைத்து ஆடினார்கள். ஜோகம்மாள் அதில் ஆடினாள். பின்னர், சின்னத்தாயி மற்றும் இளம்பெண்கள் தண்ணீரில் நீந்துவது போலக் கையை ஆட்டி உற்சாகமாக ஆடினார்கள். இளம் பெண்களின் உற்று நோக்கிய பார்வையில் ஈர்க்கப்பட்ட சில இளைஞர்களும் அந்த ஆட்டத்தில் பங்கெடுத்தார்கள்”** என்ற வரிகள் விவரிக்கின்றன.

**பாலியல் வன்முறை**

சமூகத்தில் அன்றுதொட்டு இன்றுவரை தொடரும் சிக்கல்களில் குறிப்படத்தக்கது ஆண் பெண்ணிற்கு இழைக்கும் அநீதியாகும். பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளில் மிகவும் கொடுமையானது பாலியல் வன்முறை. சமூகத்தில் சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் மணமான பெண்கள்வரை பலர் பலவகைகளில் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர்.

ஆண் உயர்வு, பெண் தாழ்வு எனும் பாலியல் வேறுபாட்டின் உச்சநிலை அவலம் பாலியல் ஒடுக்குமுறை. பாலியல் ஒடுக்குமுறையின் மிகக்கொடூரமான வெளிப்பாடு பாலியல் வன்முறையாகும். கற்பு என்றால் அது பெண்களுக்கு மட்டுமே என்று எண்ணிவரும் நமது சமுதாயத்தில் ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு ஆளாகும்போது அவளது பெண்மைக்கு அணிகலனாகத் திணிக்கப்பட்ட கற்பு அழிந்துவிட்டதாகத் தீர்மானித்து **‘கெட்டுப்போனவள்’** என்று ஒதுக்கப்படுகின்றாள். குடும்பம், சமூகம் ஆகிய இரண்டு நிறுவனங்களும் பெண்கள் மீது அதிகாரம் **(power)** செலுத்துவதற்குப் பாலியல் வன்முறை **(Sexual Violence)** ஓர் அடிப்படைக் கருவியாக இயங்கி வருகிறது.

**எந்தெந்த சமூதாயம் கற்புக்கும், கன்னித் தன்மைக்கும் மதிப்பு கொடுக்கிறதோ அங்கெல்லாம்தான் தவறுகள் அதிகம் நடக்கின்றன என்கிறார்கள் வரலாற்று அறிஞர்கள்."( நாராயணரெட்டி, 'உயிர்' ஜூனியர் விகடன் (12.02.2006) ப -34)**

பெண்ணிற்குக் கற்புக் கோட்பாட்டை வலியுறுத்தும் சமூகத்தில் அவளை ஒரு நுகர் பொருளாகக் கருதும் ஆண், தான் விரும்பிய போது அவளை அனுபவிக்க வன்முறையைப் பயன்படுத்துகிறான இன்று ஒவ்வொரு பெண்ணும் தன்னிலே சுமந்து கொண்டிருக்கின்ற பயங்களில் எல்லாம் முக்கியப் பயம் பாலியல் வன்முறை பயம். இந்தியாவில் காவல் அதிகாரிகளிடம் பிடிபிடாமல் தலைமறைவாக இருக்கும் ஆண்களைக் கைது செய்யும் முயற்சியாக பெண்களைக் கைது செய்வது போலவே சோளகப் பெண்களும் சோளக ஆண்களுக்குப் பதிலாக காவலர்களால் கைது செய்யப்பட்டு சிறை வைத்து சித்தரவதை செய்யப்படுகின்றனர்.

சோளகர் தொட்டியில் வாழும் இளம் பெண்ணான மல்லியின் தந்தை சிங்கையம்தம்பிடி வீரப்பனுக்குப் பொருள் உதவி செய்கின்றான். அதைக் கேள்விப்பட்டு அவனை கைது செய்ய வருகின்றனர் காவல்துறையினர். அவன் தலைமறைவானதை அறிந்தவுடன் மல்லியையும், அவளது கணவன் வீரபத்திரனையும் கைது செய்து அழைத்துச் செல்கின்றனர்.

**வாகனத்தின் முன் இருக்கையில் உட்கார்ந்திருந்த இன்ஸ்பெக்டர், பின்னே உட்கார்ந்திருந்த மல்லியின் மார்பைக் கையை நீட்டிப் பிடித்தான். அவளது ஜாக்கெட்டுகள் கிழிந்து, அவள் வலி தாள முடியாமல் கதறினாள்"** என்ற வரிகளில் கணவன் வீரபத்திரன் முன்பாகவே மல்லி காவல்துறை அதிகாரியால் பாலியல் சீண்டலுக்கு ஆளாவது விளக்கப்பட்டுள்ளது.

**அவன், அவள் மீது பாய்ந்தான் அவளுக்குள் பேரிடி இறங்கி வாழ்வு சூன்யமாவதை உணர்ந்தாள்**

**நடு சாமத்தின் போது இருண்ட அறையின் கதவைத் திறந்து மல்லி வெளியே தலைமுடி கலைந்து, உடைகளைச் சுருட்டி வந்தாள். அவளைப் பார்த்த சில நொடிகளில் வீரபத்திரன் விம்மினான்.அவளும் அழுதாள்.**

என்று மல்லியின் அவலத் தோற்றத்தைப் பாதிக்கப்பட்டோரின் உணர்வுகளோடு இணைத்துக்காட்டிப் பதிவு செய்துள்ளார். மற்றும் காவல்துறை அதிகாரி சிங்கப்பனால் ஐந்து முறை மல்லி பாலியல் வன்முறைக்கு ஆளானதை நாவலில் படைப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மல்லியைப் போன்றே சோளகர் தொட்டியைச் சேர்ந்த மற்ற பெண்களான மாதி, சித்தி, ஈரம்மாள், சரசு ஆகியவரும் காவல்துறையினரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாயினர்.

நாவலில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருந்த புட்டன் என்பவன் தப்பித்து விட்டான் என்று அவனைத் தேடி, அவன் வீட்டிற்கு வருகின்றனர். வீட்டிலிருந்த அவனது மனைவி ஈரம்மாளைப் பாலியல் வன்முறையால் சீரழிக்கின்றனர் காவல்துறையினர்.

**அவன் இருக்கானா? எங்கேடி அவனை மறைச்சி வச்சிருக்கிறே? என்று குண்டான போலீஸ்காரன் அவளது தலைமயிரைப் பிடித்து ஆட்டினான்..... 'சாமி என் புருஷனை நான் பார்த்து பல நாட்களாயிருச்சி' என்று கதறினாள். அவளது கழுத்தைப் பிடித்து நசுக்கினான் குண்டாயிருந்த போலீஸ்காரன். அவனது முகத்தில் வெறி ததும்பியிருந்தது**

என்ற வரிகளின் வாயிலாக காவல்துறையினர் மிருகத்தனமாக நடந்து கொண்டதையும்,

ஒரு பகல் வேளையில் வீட்டில் புகுந்து ஆறுமாதம் கர்ப்பிணியாக இருக்கும் ஈரம்மாளைக் காவல்துறையினர் மூன்றுபேர் பாலியல் வன்முறைக்குட்படுத்தி கொடூரமகச் சிதைப்பது காட்டப்பட்டுள்ளது. அதனால் அவள் கருவே கலைந்து விடுகிறது.

**ஈரம்மாளின் சேலையை உருவி எறிந்து, மேலாடைகளைக் கிழித்து அவளை அம்மணமாக்கி விட்டிருந்தார்கள். அவள் புடைத்த வயிறு காட்டி கைகால்களை ஆட்டித் தப்பித்துக் கொள்ளப் பார்த்தாள். குண்டு போலீஸ்காரனும், நடு வயதுக்காரனும், அவளைக் கீழே படுக்கவைத்து தங்களின் கால்களை அவள் கை மீது ஏறி நின்று அழுத்திக் கொண்டிருந்தார்கள். முதலில் இளையவன் அவளின் மீது பாய்ந்தான். அவளின் சப்தம் அதிகரிக்கவே. அவள் கை மீது நின்றிருந்த குண்டன் அவளது முகத்தில் காலால் அழுத்தினான். அவள் மூச்சுத்திணறி அமைதியானாள். பின்பு, குண்டன் பாய்ந்தான் அவளது முகம், உதடு, மார்புகள் கடிபடுவதை உணர்ந்தாள். "**

இவ்வாறு நாவலில் படைப்பாளர் கருக் கொண்ட பெண் என்று சுட்டி பாலியல் வன்முறை நிகழ்வை அப்படியே சித்திரித்து படிப்போரை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறார்.

மேலும் இந்நாவலில் சிவண்ணாவின் மகள் சித்தி, அவனது மனைவியுடன் காவலர்களின் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு பலவிதமான சித்ரவதைக்கும், பாலியல் வன்முறைக்கும் ஆளாகின்றனர்.

**வந்தவன் உடை களைந்து சித்தியின் மீது விழுந்தான். அவனது கைகால்கள் பக்கத்தில் உள்ளவர்கள் மீது படுவது குறித்து அவன் கவலைப்படவில்லை. அவன், அவள் மீது எச்சிலை வழித்து எம்பிச் சரியும் போதெல்லாம் சாராய வாடையை உணர்ந்தாள்....... சித்தி கையைக் குறுக்கிக் கொண்டாள். மிருகம் தன் இச்சை வெறி முடிந்ததும் கதவைச் சாத்திவிட்டு அலட்சியமாக வெளியேறியது.**

எனப் பலர் முன்னிலையில் இளம் பெண்ணான சித்திக்கு பாலியல் வன்கொடுமை மிருகக் குணங்கொண்ட காவலரால் நிகழ்ந்ததைப் படைப்பாளர் வெளிக்காட்டியுள்ளர்.

இருபெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு, பிறப்புறுப்பில், காது மடல்களில், மார்பில் மின்சாரம் பாய்ச்சி சித்திரவதை செய்யப்படுகிறார்கள். சரசு என்ற பெண்ணும் குழந்தை பெற்றெடுத்த உடம்புடன் இருக்கும் தறுவாயிலும் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றாள். எத்தனை அடிகளை வாங்கினாலும் சத்தம் போட்டுக் கத்தி அழக்கூடாது. ஆப்படி அழுதால் அதைவிட அதிகமான சித்திரவதை நடக்கும். பெண்கள் கணக்கு வழக்கின்றி, தொடர்ந்து பாலியல் வன்முறைக்குப் பலியாகின்றனர். இவ்வாறு பெண்கள் தொடர்ந்து பாலியல் வன்முறைக்கும் சிதிரவதைக்கும் பலியாவதை நாவல் நேரடிக் காட்சிகளாய் பலமுறை பதிவு செய்து படிப்போருக்கு அவலத்தை உணர்த்துவதைவிட அதிர்ச்சிக்கு உள்ளாக்குகின்றது.

**பெண்களைப் பாலியல் ரீதியாக ஒடுக்கி அடிமைப்படுத்துவது என்பது அண்மையில் குஜராத்தில் பெருவித அளவில் நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்ட அளவுக்கு வேறெந்தக் கலவரத்திலும் பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. மனித குலத்தின் கற்பனைக்கு எட்டாதவாறு சிறுபான்மையினரான முஸ்லீம் பெண்களைக் குறி வைத்து பாலியல் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.**

என்ற நடப்பியல் செய்தியும் பெண்ணிற்கு இழைக்கப்படும் குரூரங்களைச் சுட்டிக்காட்டி அமைகின்றது.

இந்து - முஸ்லீம் கலவரத்தில் முஸ்லீம் பெண்களின் கற்பு சில சமூகக் கயவர்களால் சூரையாடப்பட்டது போல் சோளகப் பழங்குடிப் பெண்களின் கற்பு காவல்துறையினரால் சூரையாடப்பட்டதைப் படைப்பாளர் விவரித்துக் காட்டியுள்ளார்.

**பாதிப்பிற்குள்ளான பெண்களின் உளநிலை**

பெண்ணுக்குப் **‘பாலியல் வன்முறை’** நேருகையில் அவளது மனநிலை, அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறதா என்பதனைக் கருத்தில் கொள்ளாமல், அவள் உடலுக்கு நேரும் விபத்தை மட்டும் மனதில் கொண்டு அவளது கற்புநெறி பற்றிய தீர்ப்பினைச் சமூகம் வழங்கிவிடுகிறது. **இந்தியச் சூழலில் பெண்ணின் உடலுக்கு நேரும் பாலுறவு வன்முறை, அவளது வாழ்க்கை முழுவதும், கடுமையான, அஞ்சத்தக்க விளைவுகளை ஏற்படுத்திவிடுகிறது. அவள் பழுதுபட்ட, கறைப்பட்ட பொருளாகவே கருதப்பட்டுக் கண்ணியம் இழந்தவளாகச் சமூகத்தில் ஒதுக்கப்படுகிறாள். திருமண வாழ்விற்கும் அவள், அருகதை அற்றவளாகக் கருதப்படுகிறாள்.”** ( எம்.ஏ.சுசீலா – விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள் ப – 127) என்பது இதனை உணர்த்துகின்றது.

நாவலில் ஈரம்மாவின் கணவன் புட்டனைக் கொன்றது மட்டுமல்லாமல் காவல்துறையினர் ஈரம்மாளையும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்துகின்றனர். கர்ப்பிணியான ஈரம்மாளின் சிசு கலைந்துவிடுகிறது. இதன் விளைவால் அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டு படுத்த படுக்கையாகக் கிடக்கிறாள்.

**ஈரம்மா மெல்லக்குணம் அடைந்தாள். பத்து நாட்களுக்குப் பின்னர் அவளால் எழுந்து நடக்க முடிந்தது. ஆனாலும், இரவுகளில் அவள் அச்சத்தில் வீரென்று கத்துவதும், தன்னந்தனியே பேசுவதுமாய் இருந்தாள்.... அவளுக்கு மாகாளி தொட்டியிலிருந்து இருளனை அழைத்து வந்து**

**மந்தரித்து எந்திரம் கட்டினார்கள். ஆனாலும், அவளுக்குள்ளிருந்த அச்சம் இன்னமும் நீங்காமலிருந்தது...... அவள் அன்றைய பொழுது அவளுக்கு நடந்தவற்றை நினைக்கும் சமயங்களில் உடல் வியர்த்து, நடுங்கி கத்திக் கொண்டு சில சமயம் மயக்கமாகி விடுவாள்.**

பாலியல் வன்முறை பாதிப்பின் அச்சம் ஈரம்மாளை மனநோயாளியாக மாறும் எல்லை வரை கொண்டு சென்றுவிடுகிறது.

இதே நாவலில் சிவண்ணாவின் மகள் சித்தி காவல்துறையினரின் கீழ்த்தரமான மிருகவெறியினால் உடலளவில் மட்டுமல்லாமல் மனதளவிலும் பெரிதும் பாதிக்கப்படுகிறாள். அவள் திருமணத்தை, இல்லற வாழ்வை மறுத்தும், வெறுத்தும் ஒதுக்குகிறாள். தன்னைத் திருமணம் செய்த ஜீருண்டைக்குத் தான் தகுதியானவள் அல்ல என்ற எண்ணமும், முகாமில் காவல்துறை மிருகங்களால் ஏற்பட்ட பாலியல் வன்முறையால் அவளுக்கு அச்சமும் ஏற்படுகின்றது.

**அவள் உடலில் மாதேஸ்வரன்மலை ஒர்க்ஷாப்பில் ஏற்பட்ட ரணங்களும், மூர்க்கத்தனமாக அவள் குதறப்பட்டதற்கும் பின், ஜீருண்டையின் பரிவும், தொடுதலும் கூட அவளுக்குத் திகில் மூட்டுவதாக இருந்தது. எனவே, அவள், அவன் தன்னைத் தொடுவதற்குக் கூட சம்மதிக்காமல் இருந்து வந்தாள்.”**

அவளின் அச்ச உணர்வு ஒரு நல்ல வாழ்வு அமைந்த பின்னும் அதை இயல்பாக ஏற்க இயலாத அளவிற்கு அவளைப் பாதித்திருந்தது என அறியலாம்.

நாவலில் விசாரணை என்ற பெயரில் மல்லியும் அவளது கணவன் வீரபத்திரனும் காவலர் முகாமிற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். காவலர்கள் கணவன் முன்பாகவே மல்லியைப் பாலியல் வன்முறைக்கு ஆளாக்குகின்றனர். பின்னர் இவர்கள் மீது எந்தக் குற்றமும் இல்லை என்று கூறி விட்டு விடுகின்றனர். தனது இருப்பிடத்திற்கு வந்ததும், அவளை ஏற்காமல் ஊரைவிட்டுத் தள்ளி வைத்துவிடுகிறான் வீரபத்திரன்.

**மல்லி அவளது குடிசைக்குள் காலெடுத்து வைக்கும்போது வாசலில் வீரபத்திரன் ‘அவள் வீட்டிற்குள் நுழையக் கூடாது. மாதேஸ்வரனுக்கு ஆகாது அவள் சாதி கெட்டுப் போய்விட்டாள். சாமி, சாதி கெட்டுப் போய்விட்டாள். லிங்காயத்துக்கு ஆகாது’ என மண்ணில் புரண்டு கத்தினான். அவனது சப்தம் லிங்காயத்துவளவு முழுவதும் எதிரொலித்தது. வீரபத்திரன் கரிய இருளில் நடந்ததை பகலில் ஊருக்கு முன் போட்டுடைத்து ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தான்.**

என்ற வரிகளின் வாயிலாக வன்முறை நிகழ்வுக்குப் பின் கணவனே அவளை நிராகரிப்பதோடு அவளுக்கு நேர்ந்த அவமானத்தை ஊர் முழுதும் பறைசாற்றுவது போல் அறிவிக்கின்றான்.

கொடூர மிருகங்கள் வாழ்ந்து வரும் அக்காட்டில், அம்மிருகங்களால் பலமுறை உயிரைக் கூட விட்டிருக்கும் சோளக மக்கள் உரு நாளும் அம்மிருகங்களுக்குப் பயந்ததில்லை. ஆனால் நாகரிக சமுதாயம் ஒன்றுகூடி, தங்களுக்காக உருவாக்கிய குடியரசையும், குடிமக்களையும் காக்கும் ‘காவல்’ என்று பெயர் பொறித்த வாகனமும், அதில் வரும் ‘காவலர்களையும்’ கண்டவுடன் தொட்டியை விட்டு தலைதெறிக்க ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் காட்டுக்குள் ஓடி ஒளிகிறார்கள் எனப் படைப்பாளி நாவலில் விவரித்துள்ளார். சோளகப் பழங்குடி மக்களிடம் பெண்ணடிமைத்தனம் என்பது மிகவும் பலவீனமாதாகவே நிலவுகின்றது என்பதை அவர்கள் பெண்களுக்கு அளித்திருந்த சம உரிமைகளின் மூலம் நாவல் சுட்டிக்காட்டுகின்றது. ஆனால் அவ்வினப் பெண்கள் அரசு இயந்திரம் எனும் முகாம்களில் பாலியல் வன்முறைக் கொடுமையின் உச்சத்தினால் வதைக்கப்பட்டதும் நெஞ்சை உலுக்கும் வகையில் நாவலில் சொல்லப்பட்டுள்ளது.